©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 26]
சென்னை, புதன்கிழமை, ஜூலை 8, 2009
ஆனி 24, திருவள்ளுவர் ஆண்டு – 2040

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (டி) எண் 248, தொழிலாளர் நலன் – வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள் : 15 ஜூலை 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 30 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1953ஆம் ஆண்டு (தமிழ்நாடு) குறைந்தளவு ஊதியங்கள் விதிகளில் பின்வரும், திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின், 30 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,

(1) 28–A விதிக்குப் பின்னர், பின்வரும் விதி சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் அதாவது:—

*"28–B தகவல் மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப மென்பொருள் சார்ந்த பிற நிறுவனங்கள் சுயசான்றளிப்பு.*

தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனம் அல்லது தகவல் தொழில்நுட்ப மென்பொருள் சார்ந்த பிற நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும், வேலையளிப்பவர், இந்த விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளின் கீழ் பராமரிக்கப்பட வேண்டியுள்ள பதிவேடுகள், பதிவுருக்கள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான அரையாண்டு பராமரிப்புச் சான்றிதழை படிவம் XII-இல் (இருபடிகளில்) தொழிலாளர் நல ஆய்வாளருக்கு அளிக்க வேண்டும். ஜூன் 30 ஆம் தேதியுடன் முடிவடையும் அரையாண்டுக் கால அளவிற்கான சான்றிதழ் அந்த ஆண்டின் ஜூலை 31ஆம் தேதிக்கு முன்னரும் டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடையும் அரையாண்டுக் கால அளவிற்கான சான்றிதழ், அடுத்து வரும் ஆண்டின் ஜனவரி 31ஆம் தேதிக்கு முன்னரும் அளிக்கப்பட வேண்டும்.

**விளக்கம்:—**

மேற்சொன்ன நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்பு இச்சட்டத்தின்கீழ் பணிகளில் அட்டவணையிடப்பட்ட வேலைவாய்ப்புகள் இல்லை. ஆயினும் இவை அட்டவணையிடப்பட்ட வேலைவாய்ப்புகள் அதாவது, கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் வேலைவாய்ப்பு என்பதன் கீழ்வரும் இதன்படி கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதிய வீதங்கள் மேற்சொன்ன வேலைவாய்ப்புகளுக்கும் பொருந்துகின்றன.

(2) படிவம் XI க்குப் பின்னர், பின்வரும் படிவம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:


DTP—III-1(a)(T-Sup) (25)—2

## படிவம் XII

*(28–B விதியைக் காண்க)*

---------ஆம் நாளுடன் முடிவடைந்த அரையாண்டு கால அளவிற்கான தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப மென்பொருள் சார்ந்த பிற நிறுவனங்கள் அளிக்கும் சுய சான்றளிப்பு:

**1.** தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனம் அல்லது தகவல் தொழில்நுட்ப மென்பொருள் சார்ந்த பிற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி:

தொலைபேசி எண் :

நிகரி :

மின்னஞ்சல் :

**2.** வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி

தொலைபேசி எண் :

நிகரி :

முகவரி :

**3. 1948**ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு பணியாளர்களுக்கு குறைந்தளவு ஊதியங்கள் வழங்கப்படுகின்றனவா**?**

**4. 27 (2)** விதியின்கீழ் பணியாளர்களுக்கு ஊதிய விவரச் சீட்டு வழங்கப்படுகின்றனவா**?**

**5. 22** ஆம் விதிகளில் வரையறுக்கப்பட்ட படிவம், X–ல் அறிவிப்பு வேலையளிப்பவரின் கையொப்பம் பார்வைக்கு வைக்கப்படுகிறதா**?**

வேலையளிப்பவரின் கையொப்பம்**.**

### சான்றிதழ்

----------------அன்றுடன் முடிவடைகின்ற அரையாண்டு கால அளவில் **1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டம், (மத்தியச் சட்டம் **11/1948**) அதன்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு **1953** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளுடன் மேலே திட்டவட்டமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளவற்றையும், நாங்கள் பின்பற்றியுள்ளோம் என்று சான்றளிக்கப்படுகிறது**.**

மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகளை முழுமையாக அறிந்தே இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது**.** மேற்சொன்ன தகவல்களில் ஏதாவது ஒன்று தவறானது என்று பின்னர் கண்டறியப்பட்டாலும், நாங்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் இவற்றிற்குப் பொறுப்பேற்பதுடன், மேற்சொன்ன சட்டம் மற்றும், அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளின்கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் உட்படுகிறோம்**.**

| | | |
|---|---|---|
| வேலையளிப்பவரின் கையொப்பம் | : | வேலை அளிப்பவரின் கையொப்பம் |
| பெயர் | : | பெயர் |
| பதவிப் பெயர் | : | பதவிப் பெயர் |
| அலுவலக முத்திரை | : | அலுவலக முத்திரை |
| நாள் | : | நாள் |
| ஏற்றுக்கொள்ளப்பட்டது | : | |
| தொழிலாளர் உதவி ஆய்வாளர் | : | |

(தமிழாக்கம்)

## அறிவிக்கை

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை

*[அரசாணை (நிலை) எண் 119, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 29 செப்டம்பர் 2008.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளில் செய்யக் கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்க்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து 45 நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவுக்கு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் கருத்துரையை அல்லது மறுப்புரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள், கருத்துரைகள் எவையேனும் இருப்பின், அவை சென்னை–600 005, சேப்பாக்கம், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் – வேலை வாய்ப்புத் துறை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில், விதி 2–A ல் இணைக்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் நெடும்பத்தி (1) இல் உள்ள 6–வது தொடர் எண் மற்றும் அது தொடர்பாக நெடும்பத்தி (2) முதல் (5) வரையில் உள்ள பதிவுகளுக்குப் பின்னர் பின்வரும் தொடர் எண்ணும், பதிவுகளும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:

| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
|---|---|---|---|---|
| 7 | விதி 61–A பாதுகாப்புப் பட்டைகளை சோதனை செய்து பரிசோதித்தல். | இயந்திரவியல் அல்லது மின்னியல் பொறியியலில் பட்டப்படிப்பு அல்லது அதற்கு இணையான படிப்பு. | தொழிலக பாதுகாப்புப் பட்டைகளை சரிபார்த்து, சோதனை செய்து ஆய்வு செய்வதில் குறைந்தளவு 7 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருப்பதுடன், தொழிலக பாதுகாப்பு பட்டைகள், வார்கள் மற்றும் அவற்றின் குறியீடுகள் தொடர்பான தரங்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். | அளவீடு செய் வதற்கான கருவிகள் மற்றும் பெரிதாக்கிக் காட்டுவதற்கான சாதனங்கள் (Harnesses.) |
| 8 | விதி 61–B அடுப்பு மற்றும் உலர்விப்பான் சாதனங்களை ஆய்வுசெய்து, சோதனை செய்தல். | இயந்திரவியல் அல்லது மின்னியல் பொறியியல் பொறியியலில் பட்டப்படிப்பு அல்லது அதற்கு இணையான பட்டப் படிப்பு. | அடுப்புகள் மற்றும் உலர்விப்பான்களை வடிவமைத்தல் அல்லது பராமரித்தல் அல்லது இயக்குதல் அல்லது சோதனை செய்து ஆய்வு செய்வதில் குறைந்தது ஏழாண்டு அனுபவம்.<br><br>(ii) செயலிலுள்ள தொடர்பான நடைமுறை விதிகளையும் சோதனை நடைமுறைகளையும் அறிந்திருத்தல்.<br><br>(iii) அடுப்புகள் மற்றும் உலர்விப்பான்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டப்படிக்கான தேவைகளை அறிந்திருத்தல்.<br><br>(iv) அடுப்புகள் மற்றும் உலவிப்பான்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவற்றின் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அவற்றின் உரிய செயல்பாடு பற்றி நன்கு அறிந்திருத்தல்.<br><br>(v) அடுப்புகள் மற்றும் உலர்விப்பான்கள் செயல்படத் தவறியதற்கான குறைகளையும், காரணங்களையும் கண்டறியும் திறமை பெற்றிருத்தல். | பாதுகாப்பு குறித்து சோதனை செய்து சான்றிதழ் அளிப்பதற்காக உரியவாறு அளவிடப்பட்டு சான்றளிக் கப்பட்ட மீட்டர்கள் கருவிகள் மற்றும் சாதனங்கள்.<br><br>(ii) சேதம் விளைவிக்காத சோதனைகளை மேற்கொள் வதற்கான வசதிகள். |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | | | (vi) அடுப்புகள் மற்றும் உலர்விப்பான்களின் பாதுகாப்பு குறித்து நம்பத்தக்க முடிவுக்கு வரும் திறமை. | | |
| 9 | விதி **61** P வெப்பமாக்கும் கருவியின் மின் இயக்க கம்பிச்சுருளை சோதனை செய்தல். | (i) துணை விதி **(16)** வெப்பமாக்கும் கருவியின் மின் இயக்க கம்பிச்சுருளைச் சோதனை செய்தல் இயந்திரவியல் அல்லது மின்னியல், பொறியியலில் பட்டப்படிப்பு அல்லது அதற்கு இணையான படிப்பு. | வெப்பமாக்கும் கருவியை வடிவமைத்தல் அல்லது பராமரித்தல் அல்லது சோதனை செய்து ஆய்வு செய்வதில் குறைந்தது ஏழாண்டு அனுபவம். | அழுத்த சோதனை செய்வதற்கான வசதிகள். | |
| | (ii) துணை விதி **(18)** வெப்பமான திரவத்தை சோதனை செய்தல். | வேதியியலில் முதுநிலைப் பட்டப்படிப்பு அல்லது வேதியியல் பொறியியலில் பட்டம். | வெப்பமான திரவங்களை சோதனை செய்வதில் ஏழாண்டு அனுபவம். | வெப்பமான திரவங்களின் அமிலத்தன்மை மிதக்கும் பொருள்கள், சாம்பல் பொருள்கள், பிசுப்புத் தன்மை, தீப்பற்றிக் கொள்ளக்கூடிய வெப்பநிலை ஆகியவற்றை சோதனை செய்வதற்கான ஆய்வுக்கூட வசதிகள். | |
| 10 | விதி 95, விவர அட்டவணை XVI, பகுதி II, பத்தி 7 கருவிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்களை சோதனை செய்தல். | வேதியியல் பொறியியலில் அல்லது தொழில்நுட்பவியலில் அல்லது கருவியியல் பொறியியலில் அல்லது தொழில்நுட்பவியலில் அல்லது இயந்திரவியலில் பொறியியலில் பட்டப் படிப்பு. | (i) (a) செய்முறைக் கருவிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்களை இயக்குதல் அல்லது பராமரித்தலில் (அல்லது)<br>(b) சோதனை செய்தல், பரிசோதித்தல் மற்றும் ஆய்வு செய்வதில் குறைந்தது ஏழாண்டு அனுபவம்.<br>(ii) நடப்பு நடைமுறை விதிகள் மற்றும் சோதனை நடைமுறைகளை முழுவதுமாக அறிந்திருப்பதுடன், செய்முறைக் கருவிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்களின் நம்பகத் தன்மை மற்றும் உரிய செயல்பாடு தொடர்பாக முடிவு எடுக்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டும். | செய்முறைக்கருவிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்களைச் சோதனை செய்யும் பணியை மேற்கொள்வதற்காக உரியவாறு அளவிடப்பட்டு சான்றளிக்கப்பட்ட மீட்டர்கள், கருவிகள், சாதனங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான வசதிகள். | |
| 11 | விதி **95** விவர அட்டவணை XVI பகுதி II பத்தி **15** தளவாடங்கள் மற்றும் சாதனங்களை சோதனை செய்தல், பரிசோதித்தல், பழுதுபார்த்தல். | வேதியியல் பொறியியலில் அல்லது தொழில்நுட்பவியலில் அல்லது கருவியியல் பொறியியலில் அல்லது தொழில்நுட்பவியலில் அல்லது இயந்திரவியல் பொறியியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். | (i) (a) வேதியியல் தொழிற்சாலையில் செய்முறை தளவாடத்தை இயக்குவதில் அல்லது பராமரிப்பதில்<br>(b) வேதியியல் தொழிற்சாலையில் தளவாடம், சாதனம் மற்றும் இயந்திரத்தை சோதனை செய்வதில் பரிசோதிப்பதில் மற்றும் ஆய்வு செய்வதில் குறைந்தது ஏழாண்டு அனுபவம் இருக்க வேண்டும். | அல்ட்ரா சோனிக் முறையில் கனத்தை அளவிடும் சாதனம், பழுதுகளைக் கண்டறியும் சாதனம் நீரழுத்தவியல் பம்பு, நச்சுத்தன்மையுள்ள எளிதில் தீப்பற்றத்தக்க வாயுக்களைக் கண்டறியும் பல்வகை வாயுக்களைக் கண்டறியும் சாதனம் கையில் எடுத்துச் செல்லத்தக்க சாதனம் போன்ற சேதம் ஏற்படுத்தாத சோதனையிடும் சாதனங்கள். | |

| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
|---|---|---|---|---|---|
| | | | (ii) (a) சம்பந்தப்பட்ட அபாயகரமான நடைமுறையை முழுமையாக அவர் அறிந்திருக்க வேண்டும்.<br><br>(b) வேதியியல் நடைமுறை தொழிற்சாலையில் தளவாடச் சாதனம் மற்றும் இயந்திரம் செயல்படத் தவறியதற்கான காரணங்களையும், குறைபாடுகளையும் கண்டறியும் திறமையை அவர் பெற்றிருக்க வேண்டும்.<br><br>(c) தளவாடச் சாதனம் மற்றும் இயந்திரத்தின் பாதுகாப்பு பற்றி முடிவு எடுக்கும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். | | |
| 12 | விதி 95 விவர அட்டவணை XVI, பகுதி II, பத்தி 18. | வரையறுக்கப்பட்ட இடத்திற்குள் நுழைதல் அல்லது பணிபுரிதல். | வேதியியலில் முதுநிலைப் பட்டம் அல்லது வேதியியல் பொறியியலில் பட்டம். | சுற்றுச்சுழல் மாதிரிகளை சேகரித்து ஆய்வு செய்வதிலும் கண்காணிப்பு சாதனங்களை அளவிடுவதிலும் குறைந்தது ஏழாண்டு அனுபவம் இருக்க வேண்டும். | வரையறுக்கப்பட்ட இடத்திற்குள் வேதியியல் வாயுக்களுக்கு அல்லது பிராண வாயுவின் அளவைக் கண்டறிய மீட்டருக்குப் பொருந்தத் தக்கவாறு பல்வேறு வாயுக்களைக் கண்டறியும் வகையில் எடுத்துச் செல்லத்தக்க கருவி. |
| | | | (ii) (a) வேதியியல் பொருள்களின் அபாயகரமான தன்மை மற்றும் அவற்றின் அனுமதிக்கத்தக்க அளவின் மதிப்பு பற்றி அறிந்திருக்க வேண்டும்<br><br>(b) தொற்று ஏற்படுத்தும் பொருள்களின் மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்யும் நவீன தொழில்நுட்ப உத்திகளை அறிந்திருக்க வேண்டும் மற்றும்<br><br>(c) வரையறுக்கப்பட்ட இடத்திற்குள் நுழைந்து பணியை அல்லது ஏனைய பராமரிப்புப் பணியை மேற்கொள்வதைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பு தொடர்பான நம்பத்தக்க முடிவுகளை எடுக்கும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 13 | விதி 95, விவர அட்டவணை XVI, பகுதி V, பத்தி 5 மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தளவாடம் மற்றும் சாதனத்தை சோதனை செய்து பரிசோதித்தல். | பிளாஸ்டிக் தொழில்நுட்பவியலில் அல்லது வேதியியல் பொறியியலில் தொழில்நுட்பவியலில் அல்லது இயந்திரவியல் பொறியியலில் அல்லது மின்னியல் பொறியியலில் பட்டம். | (i) (a) வேதியியல் தொழிற்சாலையில் செய்முறைத் தளவாடத்தை இயக்குவதில் அல்லது பராமரிப்பதில், அல்லது<br>(b) வேதியியல் தொழிற்சாலையில் மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தளவாடம் மற்றும் சாதனத்தை சோதனை செய்தல், பரிசோதித்தல் மற்றும் ஆய்வு செய்வதில் குறைந்தது ஏழாண்டு அனுபவம் இருக்க வேண்டும்.<br>(ii) (a) மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தளவாடம் மற்றும் சாதனத்தைப் பொறுத்தவரையில் இயந்திரத் தரம் அல்லது தேசிய தரம் பற்றி முழுமையாக அவர் அறிந்திருக்க வேண்டும்.<br>(b) மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கின் வேதியியல் பொருளின் இணையும் தன்மை பற்றி அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும்.<br>(c) மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட தளவாடம் மற்றும் சாதனம் செயல்படத் தவறியதற்கான காரணங்கள் மற்றும் குறைபாடுகளைக் கண்டறியும் திறமையை அவர் பெற்றிருக்க வேண்டும்.<br>(d) மீண்டும் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட தளவாடம் மற்றும் சாதனத்தின் பாதுகாப்பு தொடர்பாக நம்பத்தக்க முடிவு எடுக்கும் திறமையை அவர் பெற்றிருக்க வேண்டும். | அல்ட்ரா சோனிக் முறையில் கனத்தை அளவிடும் சாதனம் பழுதுகளைக் கண்டறியும் சாதனம் நீரழுத்தவியல் பம்பு போன்று சேதம் ஏற்படுத்தாத சோதனையிடும் சாதனங்கள். | |

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு) த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.